# பெண்ணியாவின் கவிதைகள் பற்றிய ஒரு மதிப்பீட்டு ஆய்வு - பெண்ணிலை நோக்கு அணுகுமுறை

**Mr. Amirthalingam Paunanthie [1] and Dr T.Kalamany [2]**

[1]Koppay Teachers' College, Koppay, Sri Lanka.
[2]Department of Education, University of Jaffna, Sri Lanka.
(nanthie@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*இந்த ஆய்வானது, பெண்ணியாவினுடைய கவிதைகளை பெண்ணிலை நோக்கு அணுகுமுறையில் மதிப்பீடு செய்வதாக அமைகின்றது. பெண்ணியா இலங்கையின் கிழக்கேயுள்ள மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த இவர், பெண்ணியச் சித்தாந்தத்தின்மீது கொண்ட ஈடுபாட்டால் நஜீபா றூபி என்ற தனது பெயருக்குப் பதிலாக பெண்ணியா என்ற பெயருடன் கவிதையுலகில் எழுதிவருகின்றார். அவரது இரண்டு கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. பெண்ணிலை நோக்கில் இலக்கியங்களை மதிப்பீடு செய்வது அண்மைக்கால தமிழ் விமர்சனப்போக்கில் குறிப்பிடத்தக்கது. பெண்ணடக்குமுறைகள் பற்றிய பெண்ணியாவின் அடையாளப்படுத்தல்களை அடையாளங்காணுதல், பெண்ணியாவின் கவிதைகளில் மேற்கிளம்பும் பெண் விடுதலைக் கருத்துக்களை நோக்குதல் ஆகிய இரண்டு குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. இதன் மூலம் பெண்ணியா தமிழ் கவிதையுலகில் பெறும் முக்கியத்துவத்தையும் உணர்த்த முடியும். விவரண ஆய்வு முறை. பகுப்பாய்வு முறை ஆகிய ஆய்வுமுறைகளைப் பயன்படுத்தி பெண்ணிலை நோக்கில் அவரது கவிதைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. பெண்ணியாவின் கவிதைகளில் இடம்பெறும் விவரணங்களை நோக்கி அவற்றைத் தொகுத்துப் பகுத்தாய்ந்து வியாக்கியானம் செய்யப்படுகின்றது. எனவே, இந்த ஆய்வானது பெண்ணியாவின் கவிதைகளில் பேசப்படும் பெண் அடக்குமுறைகளையும் அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வேட்கையையும் பெண்ணிலை நோக்கில் மதிப்பிடுவதாக அமைகின்றது.*

***முதன்மைப் பதங்கள்:*** *பெண்ணிலை நோக்கு, பெண்ணடக்குமுறை, பெண் விடுதலை*

**ஆய்வு அறிமுகம்**

இன்றைய கலை, இலக்கிய, சமூகச் சூழலில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண்ணடிமைத்தனம், பெண்விடுதலை ஆகிய சொற்களின் பயில்வு பரவலாகவே காணப்படுகின்றது. குறிப்பாக இலக்கிய உலகில் இந்நோக்குநிலை கணிசமான கணிப்பைப் பெற்றுள்ளது எனலாம். ஆண்களோடு ஒத்த சமூக, அரசியல், பொருளாதார சமத்துவத்தைப் பெண்களும் பெறவேண்டும் என்பதே இக்கோட்பாட்டின் அடியூற்றாகும். ஆணிகளின் வசதிக்காக உருவாக்கப்பட்ட ஆணாதிக்க சமூக அமைப்பினை வலுவிழக்கச் செய்ய வேண்டும் என்பதும், பெண்களுக்கு என்று குடும்பத்திலும் சமூகத்திலும் மரபுவழியாக ஒதுக்கப்பட்ட வேலைகளும் பணிகளும் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதும் கல்வி, சமயம், வேலைவாய்ப்பு என்று எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கும் சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதும் பெண்ணியக் கோரிக்கையாகும். இத்தளம் சார்ந்த பெண்ணிலை நோக்கு, பதினெட்டாம் நூற்றாண்டின் அந்திமப் பகுதியில், ஐரோப்பாவிலே, ஓர் இயக்கமாகவும் கோட்பாடாகவும் தோன்றி வளரத் தொடங்கியது. பின்னர் காலவோட்டத்தில் ஏனைய பிரதேசங்களிலும் இக்கோட்பாடு செல்வாக்குப் பெறத் தொடங்கியது. கோட்பாட்டு அடிப்படையிலும் செயற்பாட்டு நிலையிலும் பல மாற்றங்களுக்கு உட்பட்டுவரும் பெண்ணிலை நோக்கு, இன்று ஆண்களுக்கு எதிரான கோட்பாடாக அல்லாமல் பெண்களது வாழ்வியல் நிலையைப் பற்றிப் பேசுகின்ற வகையிலே அமைய வேண்டும் என்று பரவலாகச் சிலாகிக்கப்பட்டு வருகின்றது.

பெண்ணிலை நோக்கு அல்லது பெண்ணிலை வாதம் என்பது இன்று எல்லாத் துறைகளிலும் தனது செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது. அந்தவகையில் இலக்கியத்துறையிலும் பெண்ணிலைவாதச் சிந்தனை செல்வாக்குப் பெற்றுள்ளமையை நோக்கலாம். தொடக்க காலத்தில் பெண்களது பிரச்சினைகளைப் பற்றி ஆண்களே இலக்கியங்களில் எழுதினர். எனினும், நாளடைவில் பெண்கள் தமது பிரச்சினைகளைப் பற்றித் தாங்களே இலக்கியங்களைப் படைத்தனர். அதுவே முன்னையதைக் காட்டிலும் காத்திரமானதாகவும் அமைந்தது. கவிதை,

சிறுகதை, நாவல், நாடகம், சினிமா என்று பலதுறைகளிலும் பெண்கள் தடம் பதித்துவருகின்றனர்.

## ஆய்வுப் பின்னணி

பெண்கள் தமது பிரச்சினைகளைப் பற்றித் தாமே இலக்கியங்களில் பேசத் தொடங்கினர். அந்தவகையில் தமிழிலக்கியப் புலத்திலும் பெண் எழுத்தாளர்கள் பலர் இலக்கியங்களைப் படைத்துவருகின்றமை கவனிப்பிற்குரியது. இந்நிலையில் அவர்களது இலக்கியங்களை விமர்சன ரீதியில் நோக்குவது அவசிமானதாகின்றது. பெண்ணியத் திறனாய்வு அடிப்படையில் இரண்டுவகைப்படும். (ஸ்ரீவித்தியா, 2006)

1. **பெண்ணிலைத் திறனாய்வு (Feminist criticism):** இங்கு பெண் நூலைப் படிப்பவளாக நோக்கப்படுகின்றாள். இலக்கியங்களில் பெண் பாத்திரப் படைப்புக்கள், திறனாய்வில் பெண்களைப் பற்றிய தவறான எண்ணங்கள், புறக்கணிப்புக்கள், ஆண்படைத்துள்ள இலக்கிய வரலாற்றில் உள்ள விரிசல்கள் முதலியவற்றை ஆராய்வதாக இது அமைகின்றது.
2. **பெண்ணிலை நோக்குத் திறனாய்வு (Gyno criticism):** பெண் நூலை எழுதுபவளாக நோக்கப்படுகின்றாள். அதாவது, பெண் எழுத்தாளர்கள் படைத்துள்ள இலக்கியங்களின் வரலாறு, அவற்றின் கரு, வகை, கட்டமைப்பு ஆகியவற்றை ஆராய்வதாகும்.

இந்த இரண்டு நிலைகளில் நின்று பெண்ணியம் சார்ந்த படைப்புக்களை ஆய்வு செய்கின்றபோது, அவை பேசுகின்ற உள்ளடக்கங்களை பகுத்து நோக்குவது அவசியமாகும். இலக்கியங்களை பெண்ணியக் கோட்பாடுகளின் தளத்தில் நின்று நோக்குகின்ற தன்மை காணப்படுகின்றது. அந்தவகையில் தாராண்மைவாதப் பெண்ணியம், மார்க்ஸிஸப் பெண்ணியம், சோசலிசப் பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம் ஆகிய பெண்ணியக் கோட்பாடுகள் குறிப்பிடத்தக்கன.

இந்நிலையில், சமூகத்தில் கணிசமான பங்கினராக விளங்குகின்ற பெண்களின் பிரச்சினைகளைப் பெண் படைப்பாளிகள் எவ்வாறு பார்க்கின்றனர், எவ்வாறு தமது படைப்புக்களில் வெளிப்படுத்துகின்றனர் என்பதை விமர்சன ரீதியில் நோக்க வேண்டிய தேவை எழுகின்றது.

## ஆய்வின் நோக்கம்

படைப்பிலக்கியத் துறையை வளப்படுத்துவதிலும் வழிப்படுத்துவதிலும் விமர்சனத் துறைக்கு முக்கிய பங்கு உள்ளது. படைப்பிலக்கியங்களில் - குறிப்பாக கவிதைத் துறையில் பெண்ணிலைவாதக் கருத்துக்கள் மேற்கிளம்பத் தொடங்கியுள்ளன. அந்தவகையில் இலங்கைத் தமிழ் கவிதைகளிலும் இப்போக்கைத் தரிசிக்கலாம். பெண்களுடைய பிரச்சினைகளை கவிதைகள் எவ்வாறு வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதை விமர்சன ரீதியில் பலர் ஆராய்ந்து வருகின்றனர்.

அந்தவகையில் பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களை பெண்ணிலை நோக்கில் விமர்சிக்க வேண்டிய தேவை எழுகின்றது. ஏனெனில், பெண் எழுத்தாளர் எல்லோரும் பெண்ணிலைவாத எழுத்தாளர்கள் அல்லர். பெண்ணிலை பற்றிய எழுதுபவர்கள் அனைவரும் ஒரே தளத்தில் நின்று பெண்களது பிரச்சினைகளைப் பார்ப்பவர்களுமல்லர். எனவே, பெண்ணிலைவாத எழுத்தாளர்களின் படைப்புக்களை ஆய்வு செய்யவேண்டி ஏற்படுகின்றது. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் அவ்வாறான ஆய்வுகள் வெளிவருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, பெண்ணிலைக் கோட்பாட்டுச் சட்டகங்களினூடாக பெண் கவிஞர்களின் கவிதைகளை விமர்சிக்கின்ற பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஒரு எழுத்தாளரின் தொகுதிகளையும், பலரது கவிதைகள் அடங்கிய தொகுதிகளையும் அடிப்படையாக வைத்து இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர் ஒருவரின் கவிதைகளை பெண்ணிலை நோக்கு அணுகுமுறையில் மதிப்பிடுவதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.

## ஆய்வுக்கான நியாயப்பாடு

இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்கான நியாயப்பாடுகளை விளக்குவது இங்கு அவசியமாகின்றது. அதுவே இந்த ஆய்வின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தி நிற்கும் என ஆய்வாளரால் நம்பப்படுகின்றது. பெண்ணியா என்ற புனைபெயரோடு தமிழ்க் கவிதையுலகில் அறியப்பட்ட நஜிபா றூபி என்பவரது "என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை!", "இது நதியின் நாள்" என்ற இரண்டு கவிதைத் தொகுதிகளும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

ஒரு கவிஞருடைய கவிதைகளைப் பலவேறு விமர்சனத் தளங்களில் நின்று நோக்க முடியும். எனினும் பெண்ணியாவினுடைய கவிதைகதை பெண்ணிலை நோக்கில் அணுகுவதே பொருத்தமானதாக அமையும். ஏனெனில், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் பெண்ணியக் கருத்துக்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கிவிட்டன. அந்தவகையில் 'சொல்லா சேதிகள்' கவிதைத் தொகுதி அதுவரை பெண்களைப் பற்றிச் சொல்லாத பல சேதிகளைக் கூறியது. அதுவரை கவிதையில் சொல்லாத சேதிகள் எவையெனக் கவனிப்பின், அவை ஆணாதிக்கம், பண்பாட்டு ஒடுக்குமுறை, அடிமை வாழ்வு, குடும்பச் சுமைகள், காதல்

முதலியனவாகின்றன (யோகராசா, 2007). இப்பிரச்சினைகளைப் பற்றிப் பாடுகின்ற பெண் கவிஞர்கள் பலர் இக்காலப்பகுதியில் கட்டுடைத்துக்கொண்டு மேற் கிழம்புகின்றனர். அ.சங்கரி, சிவரமணி, சன்மார்க்கா, ஔவை, ஊர்வசி, ரங்கா, மைத்திரேயி, பிரேமி, ரேணுகா என நீண்டு செல்லும் பட்டியலில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களும் அடங்குவர். அவர்களுள் மசூறா, ஏ.மஜீட், சுல்பிகா, அனார், பெண்ணியா, கெக்கிறாவை சுலைஹா போன்றவர்களைக் குறிப்பிடலாம். இப்பட்டியல் முழுமையானதோ முடிந்த முடிவோ அன்று.

பெண்ணியாவினுடைய கவிதைகளில் பெரும்பாலானவை பெண்களது பிரச்சினைகள் பற்றியே பேசுகின்றன. அவை அப்பிரச்சினைகளை எந்தநிலையில் நின்று பேசுகின்றன என்பதை ஆராய்தல் அவசியமானதாகும்.

அடக்குமுறைகளைக் கட்டுடைத்து மேலெழும் தனிமனித உணர்வுகளை அவரது கவிதைகள் எவ்வாறு எடுத்துரைக்கின்றன என்பதையும், எந்தவிதமான படைப்புளவியலை அவை அடையாளப்படுத்துகின்றன என்பதையும் பெண்ணிலையில் நின்று நோக்குவதன் மூலம், பெண்ணியாவினுடைய கவிதைகள் சமூகத்தில் ஏற்படுத்தும் அதிர்வினை அடையாளப்படுத்த வேண்டும் என்பதே இந்த ஆய்வுக்கான நியாயப்பாடாக அமைகின்றது.

**ஆய்வுக் குறிக்கோள்**

பெண்ணியாவினுடைய கவிதைகளைப் பெண்ணிலையில் நின்று மதிப்பீடு செய்யும் வகையில் அமைந்த இந்த ஆய்வின் குறிக்கோள்களாகப் பின்வருவன அமைகின்றன:

- பெண்ணடக்கு முறைகள் பற்றிய பெண்ணியாவின் அடையாளப்படுத்தல்களை அடையாளங்காணல்.
- பெண்ணியாவின் கவிதைகளில் மேற்கிளம்பும் பெண் விடுதலைக் கருத்துக்களை நோக்குதல்

**ஆய்வு முறையியல்**

ஆய்வு நோக்கங்களுக்கும் குறிக்கோள்களுக்கும் ஏற்ப இந்த ஆய்வானது விவரண ஆய்வுமுறை, பகுப்பாய்வு முறை ஆகிய ஆய்வுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அணுகப்படுகின்றது. பெண்ணியாவினுடைய கவிதைகளில் வெளிப்பட்டு நிற்கின்ற விவரணங்களினூடாகப் பெண்ணிலை நோக்கு எவ்வாறு வெளிப்படுகின்றது என்பது மதிப்பீடு செய்யப்படுகின்றது. அத்தோடு, விவரணங்களினூடாகப் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களை ஒழுங்கமைத்து, பகுப்பாய்வு செய்து மதிப்பிடுவது பகுப்பாய்வு அணுகுமுறையாகும். ஏற்கனவே உள்ள இலக்கிய விமர்சனக் கோட்பாடுகளையும் கொள்ளைகளையும் துணையாகக் கொண்டு, பகுப்பாய்வுமுறையினூடாக பெண்ணியாவினுடைய கவிதைகளைப் பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்வது இந்த ஆய்வுக்கு ஏற்புடையதாக அமையும்.

பெண்ணியாவினுடைய கவிதைகள் அதிகம் பெண்ணிலை சார்ந்தே பாடப்பட்டுள்ளன என்பதால் அவை, பெண்ணிலை நோக்கில் அணுகப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதற்காக, பெண்ணிலை நோக்கிற்கான கொள்கைகளும் கோட்பாடுகளும் இங்கு பிரயோகிக்கப்படுகின்றன.

**ஆய்வின் பெறுபேறுகளும் வியாக்கியானங்களும்**

ஆய்வின் முக்கிய பகுதியாக இதுவே அமைகின்றது. வெவ்வேறு உப தலைப்புக்களின் கீழ் பெண்ணியாவினுடைய கவிதைகள் பற்றிய ஆய்வுப் பெறுபேறுகளும் வியாக்கியானங்களும் முன்வைக்கப்படுவதோடு, பெண்ணிலை நோக்கு அணுகுமுறையிலும் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

**பெண்ணடக்குமுறை**

பெண்களுக்கான சம அந்தஸ்த்து மறுக்கப்பட்ட சூழலிலேயே பெண்விடுதலைக் கருத்துக்கள் பிரவாகம் பெறத்தொடங்கின எனலாம். முஸ்லிம் சமூகத்துப் பெண் கவிஞராக விளங்குகின்ற பெண்ணியா, பெண் அடக்குமுறையின் கட்டவிழ்ப்புகளுக்கு நசுக்கப்பட்டிருக்கின்ற பெண்களின் குரலாக ஒலிக்கின்றார். ஆண்களுக்கு எதிரான கருத்துத் தளத்தில் நின்று பார்க்காமல் பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளின் பக்கம் நின்று பாடுகின்றார். இந்நிலையில் அவருடைய கவிதைகள், ஒட்டுமொத்த ஆண் வர்க்கத்தை எதிர்ப்பதாக அமையவில்லை. மாறாக, பெண்களும் இந்த உலகில் வாழப்பிறந்த உணர்வுள்ள உயிரிகள் என்ற அங்கிகாரத்தை அவாவி நிற்பனவாக அமைந்துள்ளன. பால்நிலை அசமத்துவத்தை (gender inequality) நிராகரிக்கும் தாராண்மைவாத பெண்ணியக் கோட்பாட்டுத் தளத்தில் நின்று இவருடைய கவிதைகள் சிலவற்றை நோக்க முடிகின்றது.

ஆணாதிக்கத்தின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்படுகின்ற சமூகப் பிம்பங்களான மனிதர்கள் அதே கொள்கையைக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுள் ஆண்களே அதிகம். பெண்களின் உணர்வுகளை மதித்து, உரிமைகளை அங்கிரித்துச் செல்லுகின்ற தன்மை குறைவாகவே காணப்படுகின்றது என்பதை பெண்ணியாவின் கவிதைகள் பல இடங்களில் கோடிட்டுக் காட்டுகின்றன.

பெண்ணடக்குமுறையின் பலவேறு கோர முகங்களும் குடும்பம் என்ற வட்டத்தினுள்ளிருந்தே வெளிப்படுவதாக அவருடைய கவிதைகளில் பேசுகின்றன. அப்பா, அண்ணா, கணவன் என்று ஆணாதிக்க எண்ணம் கொண்ட குடும் உறுப்பினர்கள் பெண்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் கொல்பவர்களாகவே பெண்ணியா பதிவு செய்கின்றார்.

"மனிதத்துவத்தைத் தொலைத்த
தகப்பன்களின் மகன்களிடையே
எனக்காக
ஒரேயொரு காதலனையும் காண முடியவில்லை"

என்ற கவிதை வரிகளினூடாக, ஆணாதிக்கம் தொலைந்த மனிதத்தை அவர் அவாவுகின்றார் என்பது தெளிவாகின்றது. ஆண் பிள்ளைகளைப் பெற்று வளர்க்கின்றபோதே தந்தை தன் ஆணாதிக்க சிந்தையை அவனிடமும் செலுத்தி விடுகின்றான். அந்த அடித்தளத்தில் வளர்ந்த ஒரு ஆண் தன் மனைவியைக் காதலிக்கின்ற கணவனாக அமைய முடியாது என்ற அனுபவத்தைப் பதிவு செய்கின்றார்.

உடல் ரீதியாக மட்டுமின்றி உணர்வு ரீதியாகவும் பெண்கள் அடிமைப்படுத்தப்படுகின்றார்கள். குடும்ப அமைப்பு என்ற வலைக்குள் அகப்பட்டுக்கொண்ட பெண்களில் பெரும்பாலானவர்கள் ஆணாதிக்கக் கரங்களால் அச்சுறுத்தப்பட்டுக்கொண்டே வாழ்கின்றார்கள். வாழ்தலுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்படுகின்றோம் என்ற பிரக்ஞை அற்றவர்களாகப் பல பெண்கள் வாழ்கின்றார்கள். வேறு சிலரோ அவற்றை உணர்ந்தாலும் எதிர்க்கும் திராணியற்றவர்களாக படுக்கையோடும் மனதோடும் வீட்டோடும் கண்ணீர் வடித்துத் தொலைந்து போகின்றார்கள். இந்தப் பெண்ணடக்குமுறையின் விபரிப்பாக அமைகின்றது பெண்ணியாவின் 'வதைப்படலம்' என்ற கவிதை.

"எப்போது
எனக்கும் என் தாய்க்கும்
என் சகோதரிக்கும்
உன் ஆதிக்கத்திலிருந்து விடுதலை?
எத்தனை தடவைகள்
என்னுடன் என் தலையணைகள் அழுதிருக்கும்.
இருட்டில் நான் விடுகிற
ஒவ்வொரு துளிக் கண்ணீரும்
உன்னை நோக்கி
என்னால் விடப்படுகின்ற சாபங்களாகவே
இருக்கும்"

என்று நீண்டு செல்கின்றது அந்தக் கவிதை. மனிதாபிமானமற்ற சமூகத்தை நோக்கித் தன் அவாவுதல்களைப் பல இடங்களில் முன்வைக்கின்றார். தாம் அடக்கப்படுகின்றோம், தமது உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்ற உணர்வு பெண்களிடம் ஏற்பட்டுள்ளமையை அவருடைய கவிதைகளில் தரிசிக்க முடிந்தாலும் அந்த அடக்குமுறைகளை அனுசரித்துப் போகின்ற நிலையிலேயே பல கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.

பெண் சிசுக்கொலை, கருக்கலைப்பு என்றநிலையில் ஓரளவு மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை நாம் அவதானிக்க முடியும். குழந்தைப் பருவத்தில் பெண் பிள்ளைகளுக்கான சுதந்திரத்தை ஓரளவு அனுமதிக்கும் தமிழ், முஸ்லிம் சமூகம் அவர்களின் பூப்பெய்தலுக்குப் பின் பலவேறு கட்டுப்பாடுகளை விதித்துவிடுகின்றது. அவர்களுக்கான வாழ்க்கை நியமங்கள் வகுக்கப்பட்டு கட்டுப்பாட்டுக் கோடுகள் வரையப்படுகின்றன. அவற்றை அனுசரித்து வாழவேண்டும் என்ற புத்தி ஓதல்களும் அவற்றின்படி ஒழுகுகின்றார்களா என்பதற்கான மேற்பார்வைகளும் மிக அக்கறையோடு மேற்கொள்ளப்படுகின்றன. அதையடுத்த படிநிலையில் பெண்களது சுதந்திரத்தின் இருப்பை நிலைகுலையச் செய்யும் நிகழ்வாக திமணம் அமைகின்றது. இல்வாழ்க்கைக்கு என்று போதிக்கப்பட்ட எல்லைக் கோடுகளுக்குள் கட்டுண்டு கணவன், பிள்ளை, உறவுகள், கடமை நிறைவேற்றல் என்று சிந்தித்துத் தன் சுயத்தைத் தொலைத்து ஏங்கும் உயிரிகளாக உலாவருகின்றனர். தாம் சுதந்திர வரட்சியில் வாழ்கின்றோம் என்பதைக்கூடச் சிந்திக்க முடியாதவர்களாக, சிந்திப்பதற்கான நேரமற்றவர்கள் அவர்களுடைய பிணைப்பு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றது. அவர்களது வாழ்வோட்டத்தில் திடீரெனத் திணிக்கப்படும் இந்நியமங்கள் அவர்களை அடிமைகளாக்குவனவாகவே பெண்ணியாவினுடைய கவிதைகளில் விரிகின்றன.

"இயந்திரப் பேய்கள் வாழுகின்ற
எல்லா வீட்டின்
சமையலறைச் சுவர்களிலும்
படுக்கையறைச் சுவர்களிலும்
இந்த சரித்திரங்கள் எழுதப்படுகின்றன.
ஒருபோதும் அழிந்துவிடாமல்.
இயந்திரப் பேய்கள் ஒருபோதும்
தாங்கள் ஒரு சரித்திரம் என்பதை
உணர்வதில்லை.
படுக்கை விரிப்பைச் சரிசெய்வதையும்
புதிய சமையலைக் கண்டுபிடிப்பதையும் விட
இந்த உலகம் விரிவதே இல்லை"

என்று பெண்களை இயந்திரப் பேய்களாகவே உருவகிக்கின்றார். படுக்கையறையில் பெண் கணவனுக்குச் சுகம் கொடுப்பதாகவோ சுகம் அனுபவிப்பதாகவோ கூறாது, பிரக்ஞையற்ற நிலையில் படுக்கையைச் சரிசெய்வதாகக் கூறுவதில்லுள்ள பெண்ணியாவின் எடுத்தாள்வு சிறப்பாக உள்ளது. பெண்களுக்குக் கற்பிக்கப்படும் உவமைகளுக்கும், தலைகுனிந்து நடக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்ற ஒழுக்கக் கோவைகளுக்கும் பின்னால் ஆணாதிக்க அரசியல் உள்ளதாக 'கயல்விழி விரிந்த தோள்' என்ற கவிதையில் பாடுகின்றார்.

ஆண்கள் காதலிக்கும்போதும் புணர்ச்சியின்போதும் சொல்லும் வார்த்தைகளும் கொடுக்கும் பாராட்டுதல்களும் அவற்றின் பின்னர் அழிந்துவிடுகின்றன. அவை நிரந்தரமானவையாக இல்லை என்கின்றார். அதனால், ஒட்டுமொத்த ஆண் வர்கத்தைச் சந்தேகிக்கும் நிலை எழுகின்றது. ஆண்கள், பெண்களைப் போகப் பொருளாகக் கருதுவதோடு மட்டுமல்லாது, அங்கும் தங்கள் ஆளுமையை நிலைநாட்டி அடக்குமுறையின் கோரத்தனங்களைக் கட்டவிழ்க்க முயல்கின்றார்கள் என்பதையும்,

பெண்கள் விரும்பாவிட்டாலும் ஆணின் உடலிச்சையின் உந்தலுக்குக் கட்டுப்படவேண்டியிருக்கின்றது என்பதையும் ‘வேட்டைக்காரன்’, ‘சூனியக்காரி’, ‘ஆணிவேரின் மரபணுக்கள்’, ‘இரவுநேரத் தொழிலாளி’, ‘ஈனம்’ போன்ற கவிதைகளில் வெளிப்படுத்துகின்றார்.

“ஆணிவேரின் மரபணுக்களைக் கொண்ட
வாரிசுகளை
ஒருபோதும்
தான் என்ற சுய கர்வத்திலிருந்து
கட்டுடைக்க இயலாது.
வழிந்த சிவப்புத் திரவத்திலிருந்து
விருப்பமின்மை நிகழ்ந்தது என்பதைத் தவிர
வேறு பெரிய கண்டுபிடிப்பு எதனையும்
உணர முடியாமல் போன பின்னர்
உயிரிலிருந்து எதை எடுத்துக்கொள்ள முடியும்.”

என்ற கவிதை வரிகளினூடாக ஆணாதிக்கப் புணர்ச்சியின் அசிங்கத்தை உணர்த்துகின்றார்.

ஒரு சராசரிப் பெண் என்ற நிலையில் நின்றுகொண்டு, இந்தச் சமூகம் பெண்ணுக்குக் கற்பித்திருக்கும், கற்பித்துக் கொண்டிருக்கும் அடக்குமுறைகளைத் தனது கவிதைகளில் கவனமாகப் பதிவு செய்துள்ளார். குறிப்பாக, குடும்ப அமைப்ப பெண்ணடிமைத்தனத்தின் அத்திவாரமாக இருப்பதாக அவர் கருதுகின்றார் என்பது அவரது கவிதைகளினூடாக வெளிப்படுகின்றது. சில பெண்கள், குடும்ப அடக்குமுறையை அறியாதிருக்கின்றார்கள். வேறுசிலர் அவற்றை அறிந்தும் செயலற்றிருக்கின்றனர். இன்னும் சிலர் தம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்குமுறைக்கு எதிராகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். இம்மூன்று நிலைப்பட்டவர்களது உணர்வோட்டங்களின் பதிவாக அவரது கவிதைகள் அமைகின்றன. அந்தவகையில், பெண்ணியாவின் கவிதைகளில் பெண்விடுதலை நோக்கு எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை நோக்குதல் அவசியமாகின்றது.

**பெண்விடுதலை**

பெண்கள் தம்மீது திணிக்கப்பட்டிருக்கும் அடிமைத்தனத்துக்கு எதிராகச் செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர். அவர்களது இச்செயற்பாடுகள் எதிர்ப்பாலாருக்க எதிரான இயங்குநிலை அல்ல. மாறாக அவர்களது விடுதலை வேட்கையின் வெளிப்பாடுகளேயாகும். பெண்களுக்குக் கல்வியறிவு கிடைத்து பகுத்தறிந்து தெளியும் காலம் (Age of enlightenment) ஆரம்பித்தபோது பெண்விடுதலை பற்றிய விழிப்புணர்வு இலக்கியங்களினூடாகவும் முன்வைக்கப்பட்டன. அதற்குப் பெண்ணியாவினுடைய கவிதைகளும் விதிவிலக்கன்று.

பெண்ணியா, அடக்குமுறையின் அனுபவப் பின்புலத்தில் நின்றே தனது கவிதைகளினூடாகச் சமூகத்தின் மீது எதிர்வினையாற்றுகின்றார். வதைகளினால் ஏற்பட்ட வலிகளின் குரலாகவே பெண்விடுதலை பற்றிய அவரது கவிதைகள் அமைகின்றன. ஒட்டுமொத்த பெண்களின் குரலாக அவருடைய கவிதைகள் அமைந்துள்ளன.

“நானும் அவர்களும் அறியோம்
ஒரு யுகத்திலும் எறிந்துவிடாதபடி
நிலவின் கறுத்த பின்புறத்தை
எம் வாசல் நோக்கி
திருப்பிப் பிடித்திருப்பது எவருடைய கைகளோ?”

அடிமைத்தனத்தின் ஆணிவேரை அறியாத அபலையாக அவர் வெளிப்படுகின்றார். ‘நிலவின் கறுத்த பின்புறத்தை...’ என்ற பகுதியிலுள்ள படிமம் பெண்ணியாவின் கவித்துவத்தைப் பதச்சோறாகவும் அமைகின்றது. ஆணாதிக்கக் கரத்தின் மீயெழுகையிலிருந்து விடுதலை பெறுவது அவசியம் என்பதை அவரது கவிதைகளினூடே காணலாம். அச்சத்தையும் திகிலையும் கொடுக்கின்ற சூழலிலும் விடுதலை உணர்வு தவிர்க்க முடியாதபடி மேலெழுவதாக அவர் பிரலாபிக்கின்றார். ‘இருட்டு’ என்ற கவிதையில் இந்த விவரணத்தைக் காணலாம்.

ஆணாதிக்க ஆதரவுச் சமூகத்தில் பெண்விடுதலை என்பது போராடிப் பெறவேண்டிய ஒன்றே. அந்தப் பயணத்தில் நிச்சயமாக வெற்றி கிட்டும் என்று கூறிவிட முடியாது. பால்நிலை அசமத்துவ நிலத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள பெண்ணடிமைத்தனத்தைப் பிடுங்கியெறியும் முயற்சியில் தோல்விகள் நேரலாம். எனினும், போராடாது பொறுத்துப்போகப் பெண்கள் தயாராக இல்லை. அவரது கவிதைகளில் பெண்கள் உன்னதப் பிறவிகளாகக் காட்டப்படுகின்றனர்.

“சம்பிரதாயக் கயிற்றில் என்னைத்
திரித்து வதைசெய்ய வேண்டாம்.
அதனுள் அழுகிய மனிதனாய் வாழுதல்
அழிந்து அமிழ்ந்து போதல்
என்னால் இயலாது.
.........................
சராசரித் திருமணத்திலோ
உடல் உணர்தல்களிலோ
நான் திருப்தியுறுபவளல்ல
என் திருப்தி என்பதும்
விடுதலை என்பதும்
உங்களுள் அடக்கப்பட முடியாதவை
உங்களுள் உணர்த்தப்பட முடியாதவை”

பெண்விடுதலை பற்றி ஆணாதிக்கச் சேற்றில் வளர்ந்த ‘மேன்மக்களால்’ சிந்திக்க முடியாது என்கிறார். அதனால், வாழ்தலெனினும் சாதலெனினும் பெண் தனக்காகவே செய்ய வேண்டும். சுதந்திரமாக வாழ விடாவிட்டால், பிணங்களாகத்தான் வாழ வைப்பார்கள் என்றால் அந்த வாழ்வே வேண்டாம். அதைவிட கொலைசெய்துவிடுவதே சிறந்தது என்றும் ‘முட்களின் கதை’ என்ற கவிதையில்

விண்ணப்பிக்கின்றார். 'பச்சைக் கனவு' என்ற அவரது கவிதை பெண்ணடிமைத்தனமற்ற விடுதலை பூமியில் சஞ்சரிக்கும் ஒரு ஆத்மாவின் குரலாக அமைகின்றது. பெண்களின் இதயத்தைப் பிழிந்து கண்ணீர் எடுக்கும் ஆணாதிக்கக் கைங்கரியங்களோ கண்ணீரால் நனையும் தலையணைகளோ சகோதரர்களின் கழுத்தறுப்புக்களோ இல்லாத ஆண் பெண் சமத்துவ உலகத்தைக் கனவுலகமாகச் சிருஸ்டிக்கின்றார். பெண்விடுதலை பற்றிய பெண்ணியாவின் கவிதைகளில் 'புத்துயிர்த்தல்' கூர்ந்த கவனிப்புக்குரியது.

"ஆயினும் ஆயினும் வாழ்வேன்
ஆச்சரியமேயாயினும்
எனையழுத்தும் இவ்
இறுகிய பார்வைகளினூடிருந்து
வீறு கொண்டதொரு புயலாய் நிமிர்வேன்
கூவத்தான் முடியாதாயினும்
ஈனஸ்வரத்திலேனும் என் பாடல்களை முனகியபடி
யார் முன்னும் பணிதலன்றி
எனது உணர்வுகளோடும் அவாக்களோடும்
எவ்வகை வாழ்வெனப் புரியாத இது
குழப்பமிகு வாழ்வேதானாயினும்
வாழ்வேன்
வாழ்வேன்
வாழ்வேன் நான்"

என்று விடுதலைபெற்று வாழ்தலுக்கான உறுதிப்பாட்டை எடுத்துரைக்கின்றார். பெண் தனது விருப்பற்ற அல்லது சுய பிரக்ஞையற்ற, ஆணோடான பாலுறவின்பதத்திலிருந்தும் அதற்கு அடித்தளமான குடும்ப அமைப்பிலிருந்தும் முழுமையாக வெளியேறும் தீவிரவாதப் பெண்ணியப்போக்கை பெண்விடுதலைக்கான வழியாக போதிக்க முடியாத, தான்சார்ந்த சமூகத்தின் இருப்பையும் சிதைக்காத கருத்துக்களையே பெண்ணியா கொண்டிருக்கின்றார் என்பது அவரது கவிதைகளைப் படிக்கின்றபோது புலனாகின்றது. குடும்பத்தையும் பிற உறவுகளையும் அனுசரித்துக்கொள்ளும் அதேவேளை, தனக்குரிய இடம், பங்கு, அந்தஸ்து ஆகியவற்றையும் எடுத்துக்கொள்ளும் விடுதலையையே அவரது கவிதைகள் பேசுகின்றன.

**நிறைவுரை**

1990 களிலிருந்து இலங்கைத் தமிழ்க் கவிதையுலகில் அறியப்பட்டவரான பெண்ணியாவின் கவிதைகளில் பெண்ணியக் கருத்துக்களே அதிகம் பேசப்படுகின்றன. பெண்ணடிமைத்தனமும் அதற்கான காரணங்களும் பெண் விடுதலை பற்றிய தேவையும் அவரது கவிதைகளின் பாடுபொருளாக அமைகின்றன. குறிப்பாக, குடும்பச் சக்கரத்திலிருந்து தூக்கியெறியப்படுவதை விரும்பாத சராசரிப் பெண்ணாக நின்றுகொண்டே பெண்விடுதலை பற்றிய கொள்கையைப் பேசுகின்றார். வேலைச்சுமை, புரிதலின்மை, பால்நிலை அசமத்துவம், பாரம்பரியக் கருத்தியல்கள் என்று பெண்களை அடிமைகளாக்கும் பல விடயங்களை விமர்சத்துக்குள்ளாக்கி, பெண்விடுதலை பற்றிய அவாவினை வெளிப்படுத்துகின்றார். எனினும், பெண்களை அடக்கியாள நினைக்கும், குடும்பத்து ஆண் உறவுகளை அப்படியே ஏற்றுக்கொள்ளவும் அவர் தயாராக இல்லை. தீவிரவாதப் பெண்ணியச் சிந்தனைகள் பரவிவரும் இன்றைய சூழலில், பெண்ணியா தான் சார்ந்த முஸ்லிம் சமூகத்தினதும் இஸ்லாமிய மதத்தினதும் அடிப்படைக் கோட்பாடுகளை அதிர வைக்காத ஒரு கவிஞராக விளங்குகின்றார்.

**உசாத்துணைகள்**


1) பெண்ணியா. (2006) என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை!. ஊடறு

2) பெண்ணியா. (2008) இது நதியின் நாள். கொழும்பு: சிறகுநுனி

3) முத்துச் சிதம்பரம். (1999) பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும். சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்

4) யோகராசா,செ. (2007) ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கம் - புதிய தரவுகள் - புதிய போக்குகள். கொழும்பு – சென்னை: குமரன் புத்தக இல்லம்

5) வாசுகி,சி, அயோத்தி,சி. (2007) பன்முக நோக்கில் பெண்ணியப் பதிவுகள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்